மனிதாபிமான புனர்வாழ்வு செயற்பாடுகளுக்கான தேசிய சங்கம்.
National Association For Humanitarian Rehabilitation Operations
NAHRO
KN/DS/SS/NGO/2012/06 NO-20, Kanagapuram, Kilinochchi. E-Mail :- nahrongo@gmail.com

03.11.2014

திரு.S.சதா

லோட்டஸ்.

அன்புடையீர்.

தையல் பயிற்சியாளர்கள் தொடர்பானது.

கோணாவில் கிராமத்தில் நடைபெற்ற தையல் பயிற்சி ஐப்பசி மாதம் 31ம் திகதியுடன் முடிவடைந்துள்ள நிலையில் தையல் பயிற்சியினை இறுதிவரை திறம்படக்கற்று முடித்த 17 பயிற்சியாளர்களிடமும், தனித்தனி நேர்காணல் செய்யப்பட்டது. அதன்படி பயிற்சியளர்களின் எதிர்பார்ப்பும், இறுதி வேண்டுதலாகவும் தமக்கான பயிற்சியினை வழங்குவதற்கு நிதி உதவி செய்த நிறுவனம் தமக்கான ஓர் நிலையான சுய தொழில் வாய்பை ஏற்படுத்தி தரவேண்டும் என்ற எதிர்பார்ப்பினைக்கொண்டுள்ளனர். அதாவது இப்பயிற்சியில் கலந்து கொண்டவர்கள் அனேகமானவர்கள் பெண்தலைமைத்துவக்குடும்பங்களும்,மாற்றுத்திறனாளிகளுமே இவர்கள் அனைவரும் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள் அதுகும் கிளி நகரில் இருந்து 15கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மிகவும் பின்தங்கிய கிராமத்தை சேர்ந்தவர்கள். அங்கே ஒரு தையல் கடையை அமைத்து அதில் தைத்து வருமானம் பெறமுடியாது. அதே நேரம் தனித்தனியாக வீடுகளிலும் தைத்து கூடுதல் வருமானங்களைப்பெறமுடியாது. இந்நிலையில் பிரதான நகரை அண்டிய பகுதியில் தையல் கடையினை அமைத்து அதில் தையல் நடவடிக்கைகளை மேற்கொண்டால் கூடுதல் வருமானங்களைப்பெறமுடியும். இதுவே பயனாளிகளில் 75வீதமானவர்களின் விருப்பாகவும் அமையப்பெற்றது.

மேலும் தையல் பயிற்சிகளில் ஈடுபட்ட 17.பயிற்சியாளர்களுக்கும் முறைப்படி தையல் ஆசிரியரினால் தையல் பரீட்சைகள் நடைபெற்று அதிலும் பயிற்சியாளர்கள் சிறப்பு தேர்ச்சி பெற்றுள்ளார்கள். அத்தோடு நேர்காணல் செய்யப்பட்ட 04.பயனாளிகளது கேஸ்ரடி விபரம் இத்தோடு இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றது. பரீட்சையில் தேர்ச்சிபெற்ற 06.பேர் தையல் கடைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஏனையவர்களை வேறு தையல் நிலையங்களுடன் தொடர்பு படுத்தி விடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றது.

மேற்படி விடயங்களை தங்களின் மேலான கவனத்திற்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

இணைப்பு.

- பயிற்சியாளர்களின் தையல் பரீட்சை பெறுபேறுகள்.
- நேர்காணல் (கேஸ்ரடிகள்.04)

நன்றி.

திரு.த.குருகுலராஜா

கௌரவ தலைவர்